1) A சரியானது  2) B சரியானது  3) A, B இரண்டும் சரியானவை
4) A சரியானாக அமைவதுடன் B யின் மூலம் அது சரியாக விளக்கப்படும்
5) B சரியானதாக அமைவதுடன் A யின் மூலம் அது சரியாக விளக்கப்படும். (4)

309. நீரின் தரம் மாற்றம் அடைவதற்கு காரணமாக உள்ள நீரின் இயல்பு
1) ஓட்டற் பண்பு விசை  2) மயிர்த்துளை விசை
3) சிறந்த கரைப்பான்  4) அடர்த்தி $1g/cm^3$ ஆக இருத்தல்
5) H, O அணுக்களால் ஆக்கப்பட்டிருத்தல் (5)

310. நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவில் செல்வாக்குச் செலுத்தும் காரணி அல்லாதது
1) வெப்பநிலை  2) கலங்கல் தன்மை  3) நீர்வாழ் அங்கிகள்
4) குத்துயரம்  5) உவர் தன்மை (6)

311. குடி நீருக்கான தேசிய தரச் சான்றிதழ் பின்வருவனவற்றில் எது?
1) ISO 22000  2) HACCP  3) SLS 894
4) 5  5) ater board இலச்சினை (8)

312. நீரின் இரசாயன பிரமானம் பின்வருவனவற்றுள் எது?
1) கலங்கற் தன்மை  2) படிவுறும் திண்மப் பதார்த்தங்களின் அளவு
3) கடினத்தன்மை  4) நிறம்  5) வெப்பநிலை

PDE, NP

313. நீரின் தரத்தை சோதிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களில் படிவகுக்கை மேற்கொண்டு வாசிப்பு பெறப்படும் தேவை அற்றது (10)
1) இலத்திரனியல் $P^H$ மானி  2) EC மானி  3) DO மானி
4) இலத்திரனியல் வெப்பமானி  5) செக்கின் தட்டு

314. நீர் நிலையிலுள்ள நீர் மாதிரி எடுக்கப்பட்டு, மனித மலத்தின் தொற்றுதல் அடைந்துள்ளதா என அறியும் Coli form பற்றீரியா பரிசோதனை செய்யப்பட்டு சோதனை அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கையின்படி, இந்நீர் குடிப்பதற்கு உகந்தது என சிபார்சு செய்யப்பட்டது. இந்நீரில் காணப்படும் E.Coli பற்றீரியாவின் அளவு (12)
1) 6  2) 5  3) 4  4) 7  5) 8

315. குடிநீர்ச் சுத்திகரிப்பில் தொற்று நீக்கம் செய்வதற்கு குறைந்த செலவு ஏற்படும் முறையாவது
1) கொதிக்க வைத்தல்  2) குளோரினேற்றம்  3) ஓசோனேற்றம்
4) சூரியவொளியில் வைத்தல்  5) UV கதிர்வீச்சு

316. நீரின் கடினத்தன்மை பற்றிய கூற்றுக்களில் சரியானது (13)
1) அதிகளவு கடினத்தன்மையுள்ள நீர் பாவனைக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
2) மேற்பரப்பு நீர் நிலக்கீழ் நீரிலும் பார்க்க அதிகளவு கடினத்தன்மை உடையது.
3) நிரந்தர வன்மையானது வெப்பமேற்றப்படுவதன் மூலம் அகற்ற முடியும்
4) நீரில் கரைந்துள்ள Mg, Ca அயன்களில் குளோரைட்டுகள் மூலம் தற்காலிக கடினத்தன்மை ஏற்படுகின்றது.
5) நீரின் கடினத்தன்மை 200mg/*l* ஐ விட அதிகரிக்கும் போது அந்நீர் கடினத்தன்மை கொண்டதாகும்.

317. கழிவு நீர் பரிகரிப்பு செயன்முறைகள் தொடர்பான கூற்றுக்கள் பின்வருமாறு

A. முதலாம் நிலை பரிகரிப்பில் உயிரியல் சார்ந்த பரிகரிப்பு முறைகள் எதுவும் இடம்பெறுவதில்லை.

B. முதலாம் நிலை பரிகரிப்பில் 75% ஆன சேதனப் பதார்த்தங்கள் அகற்றப்படுகின்றன.

C. இரண்டாம் நிலை சுத்திகரிப்பின்போது கழிவு நீரானது நன்கு காற்றூட்டம் செய்யப்படுகின்றது.

D. வடிகட்டல் முறையில் இரண்டாம் நிலை சுத்திகரிப்பின்போது கழிவு நீரானது காற்றூட்டம் செய்யப் படுகின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

1) A, B மாத்திரம் 2) A, C மாத்திரம் 3) B, C மாத்திரம்
4) A, B, C மாத்திரம் 5) B, C, D மாத்திரம் (14)

318. நீரிற்கு படிகாரம் சேர்ப்பதனால்

1) நுண்ணங்கிகளை அகற்றலாம்
2) நீரின் நிறத்தை அகற்றலாம்
3) நீரில் உள்ள சிறிய திண்மப்பதார்த்தங்களை அகற்றலாம்
4) காற்று வாழ்வு பற்றீரியாக்களை அகற்றலாம்
5) தொங்கல் நிலையிலுள்ள பதார்த்தத்தை அடையச் செய்யலாம் (14)

319. நீரில் அடங்கியுள்ள சேதனக் கழிவுப் பதார்த்தங்களின் அளவை அளவிடப் பயன்படுத்தப்படும் நியம பரமானமாக (Parameter) அமைவது

1) கடினத்தன்மை 2) மின் கடத்துதிறன் 2) உயிரியல் ஒட்சிசன் கேள்வி
4) கோலிபோர்ம் பற்றீரியாக்களின் எண்ணிக்கை 5) $P^H$ பெறுமானம் (15)

320. கழிவு நீரின் முதலான சுத்திகரிப்பின்போது வடித்தல் மேற்கொள்ளப்படுவது

1) போசனை மூலகங்களை அகற்றுவதற்காகும்
2) தொங்கல்நிலைப் படிவுகளை அகற்றுவதற்காகும்.
3) மிதக்கும் பதார்த்தங்களை அகற்றுவதற்காகும்.
4) முதனிலை அடையலை அகற்றுவதற்காகும்
5) இரண்டாம்நிலை அடையலை அகற்றுவதற்காகும். (16)

## 12. நீருயர்த்தல் முறைகள்

321. முசல் வகைப் பம்பியுடன் ஒப்பிடும்போது மைநீக்கப் பம்பி

1) நீர் வெளியேற்றப்படும் அளவு சீரானது 2) நீண்டகாலம் பயன்படுத்தக் கூடியது
3) பராமரிப்பு செலவு அதிகம் 4) ஆரம்பச் செலவு அதிகம்
5) கழிவுப் பொருள் கொண்ட நீரைப் பம்ப முடியும் (1)

322. 5m ஆழமான கிணற்றிலிருந்து 12m உயரமான நீர்த் தாங்கிக்கு நீர்பம்பப்படும் போதுள்ள மொத்த நிலையியல் நிரலைக் காண்க. (நீர்பம்பப்படும் சந்தர்ப்பத்தில் உராய்வு நிரல் 2cm ஆகும்)

1) 15m 2) 17m 3) 12.02m 4) 16.18m 5. 17.2m (3)

323.



படத்தில் காட்டப்பட்டுள்ள நீருயர்த்தல் உபகரணம்

1) துலா 2) கமலை
3) பலவாளிச் சூத்திரம் 4) நீர்ச்சில்
5) முசலபம்பி (3)

324. நீருயர்த்தல் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களை கருதுக.

A - ஆழமான கிணற்றிலிருந்து நீரைப் பம்புவதற்கு விசேட உபகரணத் தொகுதி பயன்படுத்தப்படும்.

B - சாதாரண பம்பியின் உறுஞ்சல் நிரல் 7.5m ஆகும்.

மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக

1. A சரி B தவறு 2. B சரி A தவறு 3. A, B சரியானவை
4. A, B சரியானவை, A யினால் B மேலும் தெளிவாகின்றது.
5. A,B சரியானவை. B யினால் A மேலும் தெளிவாகின்றது. (4)

PDE, NP

325. நீர்பம்பிகள் தொடர்பான கீழ் தரப்பட்ட கூற்றுக்களில் சரியானது,

1) மைய நீக்கப் பம்பியின் திரவங்களைப் பம்ப முன் சுருளியுரு அறை திரவத்தினால் நிரப்பப்பட வேண்டும்
2) கழிவுகள் கொண்ட அசுத்த நீரைப் பம்புவதற்கு முசல பம்பியில் சுலபமாக அகற்றப்படும்.
3) அடி வால்பு தொடக்கம் பம்பியறை வரையுள்ள வளி முசலவகைப் பம்பி பம்பியில் சுயமாக அகற்றப்படும்.
4) ஆழம் குறைவான கிணறுகளிற்கு "ராம்ப்" பம்பி உகந்தது.
5) மையநீக்கப் பம்பியினால் பம்பப்படும் நீரின் தூய்மை குறைவு எனில் ஆழ் கிணறுத் தொகுதி கொண்ட பம்பியை பயன்படுத்தலாம். (5)

326. வயலுக்கு அண்மையிலுள்ள நீர்க்குட்டையிலிருந்து நீரை உயர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் பாரம்பரியமுறை எது?

1. கப்பி 2) துலா 3) நீர்ச்சில்லு
4) ராம்ப் பம்பி 5) கமலை

327. மையநீக்கப்பம்பி தொழிற்படும் போது நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் Foot valve கழற்றும் போது வெளியேறும் நீர் தொடர்பானது

1) நீர் வெளியேறும் வீதம் அதிகம்
2) நீர் வெளியேறும் வீதம் குறையும்
3) நீர் வெளியேறும் வீதம் குறைந்து கூடும்
4) நீர் வெளியேறும் வீதம் மாறாது
5) நீர் வெளியேறும் வீதம் அதிகரித்துக் காணப்படும். (6)

328. 6m ஆழமான கிணற்றிலிருந்து நீரானது சாதாரண பம்பி மூலம் 12m உயரமுள்ள நீர்த்தாங்கிக்கு பம்பப்படுகின்றது. உராய்வு நிரல் 12cm எனின் மொத்த நிலையியல் நிரலைக் காண்க. (சாதாரண பம்பியின் உறுஞ்சல் நிரல் உயரம் 7.5m ஆகம்)

1. 6.12m 2) 18.12m 3) 18.00 m 4) 30m 5) 19.52m (8)

329. முசலவகைப் பம்பி

1) வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்றவாறு பம்பிகள் உருவாக்கப்பட்டிருத்தல்
2) இடத்துக்கிடம் எடுத்துச் சென்று நீரைப் பம்பக் கூடியதாகவிருத்தல்
3) கழிவுகள் கொண்ட அசுத்த நீரையும் பம்பக் கூடியதாகவிருத்தல்
4) குறைந்த இடப்பரப்பு போதுமானது
5) வெளியேற்றப்படும் நீரின் அளவு சீராக காணப்படும்

330. மைய நீக்கி பம்பியுடன் ஒப்பிடும்போது முசல வகைப்பம்பி

1) சேறு கலந்த நீரையும் பம்ப முடியும் 2) நீரைத் தொடர்ச்சியாக வெளியேற்ற முடியும்
3) சூழல் மாசடையாது 4) வெளியேற்றப்படும் நீரின் அளவை மாற்ற முடியும்
5) குறைந்த இடப்பரப்பு போதுமானது (10)

331. நீர்ப்பம்பியைப் பராமரிக்கும் போது மாதாந்தம் கவனம் செலுத்த வேண்டிய விடயம் (10)

1) நீர்ப்பம்பியின் சத்தம் 2) வோல்ற்றளவு, மின்னின் அளவு
3) மோட்டரின் சத்தம்
4) நீர்ப்பம்பியின் இணைப்புகளில் கசிவு ஏற்படுகின்றதா என்பது
5) மின் இணைப்புக்கள் இறுக்கமாக உள்ளனவா என்பது

332. நீர்ப்பம்பி செயற்படினும் உட்புகும் குழாயினூடாக நீர் மேல் நோக்கி இழுக்கப்படாமைக்கான காரணத்தை மாணவனொருவன் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவித்தான்.

A - நீர்ப்பம்பியிலிருந்து அடிவால்வு வரையான குழாயில் வளி தேங்கியிருத்தல்
B - அடிவால்வில் இருந்து நீர்க்கசிவு ஏற்படல் C - பம்பி அதிக நேரம் இயங்கியமை
இவற்றில் சரியான கூற்று

1. B, C மட்டும் 2. A, B மட்டும் 3. C மட்டும் 4. B மட்டும் 5. A மட்டும் (12)

333. மைய நீக்கப் பம்பிகள் மூலம் நீர் பம்பப்படுவது

1) நிகர்மாற்று முசலத்தின் (Reciprocal piston) மூலம் ஏற்படுத்தப்படும் உறிஞ்சல் மூலமாகும்.
2) மென்றகட்டின் (diaphragm) இயக்கத்தின் மூலமாகும்.
3) தள்ளி (impeller) மூலம் நீரில் ஏற்படுத்தப்படும் சுழற்சி இயக்கத்தின் மூலமாகும்.
4) பக்கப் பற்சில்லுகளின் (Gear wheels) மூலம் ஏற்படுத்தப்படும் அழுக்கத்தின் மூலமாகும்.
5) ஒரு திசையில் மட்டும் செயற்படும் வால்வுகளின் (valves) தொழிற்பாட்டின் மூலமாகும். (15)

PDE, NP

334. கடல் மட்டத்தில் நீருயர்த்தல் தொகுதியின் உறிஞ்சல் தலை 10.33m இலும் கூடுதலாக இருக்கக் கூடாததிற்குக் காரணம்
1) நீரின் அடர்த்தி அதிகரித்தல் 2) உறிஞ்சும் குழாயினுள் வளி உட்புகுதல்
3) பம்பிக்கு அண்மையில் உறிஞ்சும் குழாயில் வெற்றிடம் உருவாகுதல்
4) நீரின் பாகுநிலை அதிகரித்தல் 5) பம்பியில் மிகைச்சுமை (overlaod) அதிகரித்தல்

335. அருகே காட்டப்பட்டுள்ளது
1) பற்சில்லுப் (gear) பம்பியாகும்
2) மைய நீக்கப்(Centrifugal) பம்பியாகும்
3) சூழல் இயக்கப் (rote dynamic) பம்பியாகும்
4) சுய முதலில் வகை அல்லாத (Non - Self Priming) பம்பியாகும்.
5) மாறா இடப்பெயர்ச்சி (positive displacement) பம்பியாகும். (17)



336. படத்தில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பம்பி வகை
1) முசல வகைப்பம்பி
2) சுயமாக காற்றை வெளியேற்றாத மையநீக்க பம்பி
3) சுயமாக காற்றை வெளியேற்றும் மைய நீக்க பம்பி
4) பற்சில்லுப் பம்பி
5) திருகு பம்பி

## 13. நீர்ப்பாசனம்

337. குறித்த பயிரொன்றின் நீர்த்தேவை 5.1cm நீர்ப்பாசன வினைத்திறன் 75% எனின் களத்திற்கு வழங்கவேண்டிய மொத்த நீர்ப்பாசன தேவை யாது?
1) 7.5cm 2) 6.8cm 3) 5.1 cm 4) 3.9 cm 5) 1.7cm (1)

338. பயிரின் நீர்த்தேவை தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன
A - பயிரின் ஆவியுயிர்ப்பு, ஆவியாதல், அனுசேபத் தொழிற்பாடுகளிற்குத் தேவையான நீரின் அளவு, நுகர்வு நீர் பயன்பாடு ஆகும்.
B - தாவரத்தால் உறிஞ்சப்படும் நீரில் 1% இலும் குறைவான அளவே தாவரம் பயன்படுத்துகின்றது.
C - மாட்டேற்று ஆவியாதலாவியுயிர்ப்பு பயிரின் ஆவியாதலாவியுயிர்ப்பிற்கு சமனானது
மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக சரியானது
1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும் 4) A, B மட்டும் 5) A, C மட்டும் (1)

339. நீர் முறிப்பு எனப்படுவது
1) தரைக்கீழ் குழாய்கள் மூலம் வாவிகளுக்கு நீரை வழங்குதல்
2) பாய்ந்து செல்லும் நீர்ப் பிரவாகத்தின் வேகம் குறைவான இடங்களில் நீரை மறித்து தேக்குதல்
3) கால்வாயில் நீர் நிரம்பியவுடன் மேலதிக நீரை வெளியேற்றல்
4) பாரிய அரிமரக் குற்றிகளைப் பயன்படுத்தி அமைக்கப்படும் நீரைத் தேக்கும் அமைப்பு
5) படிமுறை ஒழுங்குப்படி அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் தொடர் (2)

340. நீர்ப்பாசன வினைத்திறன் மிகக் குறைந்த மேற்பரப்பு நீர்ப்பாசன முறை
1) வெள்ளப்படுத்தல் 2) நிரல் முறை 3) பாத்தி முறை
4) குடநீர்ப்பாசனம் 5) நுண் நீர்ப்பாசனம்

341. சோளப்பயிர் ஒன்றின் நாற்றுப்பருவத்தில் பயிர்க்குணகம் 0.5 ஆகவும் அப்பிரதேசத்தின் மாட்டேற்று ஆவியாதல் ஆவியுயிர்ப்பு 9mm ஆகவும் காணப்பட்டது. குறித்த ஒரு நாளில் நாற்றுப்பருவத்தில் உள்ள சோளப்பயிரின் ஆவியாதல் ஆவியுயிர்ப்பு யாது?
1) 0.5mm 2) 5mm 3) 9mm 4) 4.5mm 5) 45mm (2)

342. சோளப்பயிர்ச் செய்கையின் நாற்றுப் பருவத்தின் பயிர்க் குணகம் 1.1 ஆகும். ஒருவார காலத்தில் ஆவியாதல் 42mm ஆகும். ஆவியாதல் தட்டின் குணகம் 0.9 ஆயின் சோள நாற்றின் நாளொன்றிற்கான நீர்த்தேவை
1) 5.94mm 2) 9.54mm 3) 41.58mm 4) 58.41mm 5) 41.58 (3)

343. மேற்பரப்பு நீர்ப்பாசனத்தின் போது ஊடுவடிதல் நிகழும் அவத்தை
1) முன்னவத்தை 2) ஈரமாதல் அவத்தை 3) தேய்வு அவத்தை
4) பின் அவத்தை 5) ஈற்றவத்தை (3)

344. நுண்நீர்ப்பாசனம் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பிரதேச காலநிலையின் அடிப்படையிலேயே நுண்நீர்ப்பாசனத்தை தெரிவு செய்ய வேண்டும்.
B - எல்லா வகையான பயிர்களிற்கும் தூறல் நீர்ப்பாசனம் பொருத்தமானது எனினும் சில பயிர்களிற்கு துளி நீர்ப்பாசனம் பொருத்தமற்றது.
C - நுண் நீர்ப்பாசனத் தொகுதி இயங்குவதற்கு மைய நீக்க நீர்ப்பம்பி அவசியம்
தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது / சரியானவை
1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்
4) A, B மட்டும் 5) A, C மட்டும் (3)

PDF NP

345. ஊடுபுகவிடும் தன்மை குறைவான சீரான இழையமைப்பைக் கொண்ட ஆழம் குறைவான மண்ணை உடைய பயிர் நிலத்திற்கு பொருத்தமான நீர்ப்பாசன முறை
1) வெள்ளப்படுத்தல்
2) வரம்பு சால்
3) மோதிர வடிவ நீர்ப்பாசனம்
4) நிரல் நீர்ப்பாசனம்
5) துளைகள் கொண்ட குழாய் (3)

346. நாற்றுப் பருவத்திலுள்ள கத்தரிப் பயிரின் பயிர்க்குணகம் 0.7 ஆகும். மாட்டேற்று ஆவியாதலாவியுயிர்ப்பு 8cm எனில் ஒரு வாரத்தில் பயிரின் ஆவியாதலாவுயிர்ப்பு
1) 4.9cm 2) 5.6cm 3) 39.2cm 4) 392 cm 5) 56cm (4)

347. குளத்தின் மிகையான நீர்க்கொள்ளளவு காரணமாக குளக்கட்டில் ஏற்படுத்தப்படும் அமுக்கத்தை குறைப்பதற்கான அமைப்பு (4)
1) குள அடிவரம்பு
2) நீர்மட்டக்கல்
3) கலிங்கத் தொட்டி
4) அலைதாங்கி
5) மேல்மடை

348. நுண் நீர்ப்பாசனம் தொடர்பாக தவறான கூற்று
1) நுண் நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கு முசல வகை நீர்ப்பம்பிகள் அவசியம்
2) எல்லாத் தாவரங்களிற்கும் தூவல் நீர்ப்பாசனம் பொருத்தமற்றதாகக் காணப்படும்
3) துளி நீர்ப்பாசனத்தில் பயிரின் வேர் வலயத்தில் துளித்துளியாக நீர் வழங்கப்படும்
4) நுண் நீர்ப்பாசனத்தில் நீர் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது
5) நுண் நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கு முதலீட்டுச் செலவு அதிகம் (4)

349. நாற்றுப் பருவத்தில் சோளப் பயிரின் பயிர்க் குணகம் 0.5 ஆகும். நாளாந்த ஆவியுயிர்ப்பு 9mm உம் சோளப்பயிரின் நாற்றுப் பருவம் 20 நாட்களும் ஆகும். குறித்த சோள நாற்றிலிருந்து ஆவியாதலாவியுயிர்ப்பு வாரம் ஒன்றிற்கு
1) 4.5mm 2) 9mm 3) 31.5mm 4) 90mm 5) 630mm (5)

350. பயிர்ச்செய்நிலம் ஒன்றிற்கு பம்பி ஒன்றிலிருந்து வழங்கப்பட்ட நீரின் அளவு 1000*l* கொண்டு செல்லல் வினைத்திறன் 75% எனில் பயிர் நிலத்தை அடைந்த நீரின் கனவளவு யாது?
1) 750*l* 2) 1000*l* 3) 1250*l* 4) 1500*l* 5) 1750*l* (6)

351. குளத்தில் தேக்கப்பட்டுள்ள நீரைக் கட்டுப்பாட்டுடன் பயிர்செய் நிலத்துக்கு அனுப்புவதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்பு
1) குளக்கட்டு
2) கலிங்கல்தொட்டி
3) மடை
4) அலைதாங்கி
5) நீர்மட்டக்கல் (6)

352. சோளப் பயிரின் நீர் பயன்பாட்டு வினைத்திறன் 0.8 - 1.6kg/$m^3$ ஆகும். இது
1) சோளப் பயிரின் ஆவியாதல் ஆவியுயிர்ப்புப் பெறுமானமாகும்.
2) பயிருக்கு வழங்கப்பட்ட நீரின் திணிவாகும்.
3) பயிருக்கு வழங்கப்பட்ட நீரின் கனவளவு ஆகும்.
4) ஓரலகு கனவளவு நீரின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விளைச்சலின் அளவாகும்.
5) வேர் வலயத்தில் தேங்கியுள்ள நீரின் கனவளவாகும்.
(6)

PDE, NP

353. நுகர்வு நீர் பயன்பாட்டைக் குறிக்கும் சமன்பாடு
1) நுகர்வு நீர் பயன்பாடு = அனுசேபத் தொழிற்பாடுகள்+ கசிவு+ கீழ்வடிதல்
2) நுகர்வு நீர் பயன்பாடு = ஆவியாதல்+ ஆவியுயிர்ப்பு+ அனுசேபத் தொழிற்பாடுகள்
3) நுகர்வு நீர் பயன்பாடு = படிவு வீழ்ச்சி - ஆவியாதல் - கீழ் வடிதல்
4) நுகர்வு நீர் பயன்பாடு = படிவ வீழ்ச்சி - (ஆழ்கீழ்வடிதல்+ ஆவியுயிர்ப்பு)
5) நுகர்வு நீர் பயன்பாடு = ஆவியுயிர்ப்பு+ ஆவியாதல் - அனுசேபத் தொழிற்பாடுகள் (8)

354. நீர்ப்பாசன வினைத்திறன் மிகவும் குறைவான நீர்ப்பாசன முறை எது?
1) மோதிர நீர்ப்பாசனம்
2) குட நீர்ப்பாசனம்
3) வரம்பு - சால் நீர்ப்பாசனம்
4) தூறல் நீர்ப்பாசனம்
5) துளை கொண்ட குழாய் முறை

355. குறித்த பிரதேசத்திலுள்ள மிளகாய் செய்கை நிலத்தின் நாளாந்த ஆவியுயிர்ப்பு 3.0mm ஆகும். ஹெக்ரயரிலுள்ள மிளகாய்ப் பயிருக்கு தினசரி பிரயோகிப்பதற்குத் தேவையான நீர்ப்பாசன நீரின் இழிவளவான கனவளவு
1) 0.09 $m^3$ 2) 0.90 $m^3$ 3) 9.00 $m^3$ 4) 90.00 $m^3$ 2) 600.00 $m^3$ (8)

356. குறிப்பிட்ட நீர்ப்பாசன முறையின் மூலம் நீர் நிலையொன்றிலிருந்து 4000*l* நீர் வெளியேற்றப்பட்டிருந்தது. தரைக்கு நீரைக் கொண்டு செல்லும் வினைத்திறன் 70% ஆகும் எனின் பயிர் நிலத்தினால் பெறப்பட்ட நீரின் அளவானது
1) 2500*l* 2) 2800*l* 3) 3000*l* 4) 3200*l* 5) 3500*l* (9)

357. நீர் வழங்கல் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தரைமேற்பரப்பில் உள்ள நீர் மறையும் வரையிலான அவத்தை,
1) பின் அவத்தை
2) ஈரமாதல் அவத்தை
3) தேய்வு அவத்தை
4) முன் அவத்தை
5) முன் பின் அவத்தை (9)

358. பாய்ந்து செல்லும் நீரை மறிக்கும் குளத்தின் பகுதி
1) அணைக்கட்டு 2) நீர்முறிப்பு 3) மடை
4) கலிங்கற்றொட்டி 5) குள வரம்பு (10)

359. பயிரின் ஆவியாதல் ஆவியுயிர்ப்பில் செல்வாக்குச் செலுத்தும் பயிராக்கவியற் காரணியாக அமைவது,
1) களை கட்டல் 2) பயிர் பேதம் 3) தாவர குடித்தொகை
4) ஈரப்பதன் 5) மண் கட்டமைப்பு (10)

360. சோளப் பயிரின் நீர்ப் பயன்பாட்டு வினைத்திறன் $0.8 - 1.6 kg / m^3$ ஆகும். இது
1) சோளப் பயிரின் ஆவியாதல் ஆவியுயிர்ப்புப் பெறுமானம் ஆகும்.
2) பயிரிற்கு வழங்கப்பட்ட நீரின் திணிவாகும்.
3) ஓரலகு கனவளவு நீரின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விளைச்சலின் அளவாகும்.
5) வேர் வலயத்தில் தேங்கியுள்ள நீரின் கனவளவாகும். (12)

361. சோளத் தாவரத்தின் நாற்றுப் பருவத்தின் போது KC பெறுமானம் 0.5 ஆகவும் சாத்தியமான ஆவியாதல் ஆவியுயிர்ப்பு நாளொன்றிற்கு 9mm ஆகவும் காணப்படின் அத்தாவரத்தின் நாற்றுப்பருவத்தில் நாளொன்றில் இடம் பெறும் ஆவியாதல் ஆவியுயிர்ப்பு
1) 1mm ஆகும். 2) 4.5 mm ஆகும் 3) 8.5 mm ஆகும்
4) 9.5 mm ஆகும் 5) 10.5mm ஆகும். (12)

362. சோளப் பயிருக்கான நீர்ப்பாசனத் தேவையளவை அறிவதற்கான சில தரவுகள் வருமாறு
1) வேர்த் தொகுதியின் ஆழம் 10 cm
2) மண்ணின் தோற்ற அடர்த்தி $1.29 cm^3$
3) நீர்ப்பாசனங் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மண்ணின் ஈரலிப்புச்சதவீதம் 10%
4) வெளிக்களக் கொள்திறனில் ஈரலிப்புச் சதவீதம் 20%

மேற்படி தரவுகளின்படி சோளப்பயிரின் நீர்ப்பாசனத் தேவை.
1) 1 cm ஆகும் 2) 1.2 cm ஆகும் 3) 10 cm ஆகும்
4) 12cm ஆகும் 5) 120 cm ஆகும். (12)

363. உப மேற்பரப்பு நீர்ப்பாசன முறையைப் பிரதானமாக தீர்மானிப்பது
1) மண் கட்டமைப்பு 2) மண் ஆழம் 3) மண் திட்டம்
4) மண் அடர்த்தி 5) மண் இழையமைப்பு (14)

364. நீர்ப் பாசன முறையைத் தீர்மானிக்கும் பிரதான காலநிலை காரணி
1) மழைவீழ்ச்சி , வெப்பநிலை 2) மழைவீழ்ச்சி , சாரீரப்பதன் 3) வெப்பநிலை , சாரீரப்பதன்
4) சாரீரப்பதன் காற்று 5) மழைவீழ்ச்சி, காற்று (14)

365. ஆவியாதல்மானியின் ஆவியாதல் (Ep) நாளொன்றுக்கு 5.0 ஆகவுள்ள பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள குறிப்பிட்ட பயிரொன்றின் பூக்கும் கட்டத்தின் பயிர்க்குணகம் (Kc) 1.15 ஆகும். ஆவியாதல் தட்டின் குணகம் (kp) 0.8 உம் ஆகுமெனின், இந்தப் பயிரின் பூக்கும் பருவத்தில் பயிரின் ஆவியாதலாவியுயிர்ப்பு (நாளொன்றுக்கு மி.மீற்றரில்)
1) 3.7 ஆகும் 2) 4.0 ஆகும் 3) 4.6 ஆகும் 4) 5.0 ஆகும் 5) 6.3 ஆகும்

366. மிளகாய்ச் செய்கையொன்றின் பூக்கும் நிலையிலுள்ள பருவத்தின்போதான பயிர்க்குணகம் 1.2 ஆகும். ஒரு வார காலத்தின்போது தட்டு ஆவியாதல் 35mm ஆகும். தட்டுக்குணகம் 0.9 ஆயின் இந்த மிளகாய்ப் பயிர்கள் பூக்கும் போதான பயிர் நீர்த்தேவை நாளொன்றுக்கு,
1) 5.4 mm ஆகும் 2) 6.0mm ஆகும் 3. 26.3mm ஆகும் 4) 37.8mm ஆகும் 5) 42.0mm ஆகம்.

367. நீர்ப்பாசனக் கோட்பாடுகள் பற்றிய கூற்றுக்கள் சில வருமாறு
A. மயிர்த்துளை எழுச்சி பயிரின் நீர்த்தேவைக்குப் பங்களிப்புச் செய்யும்
B. பலித மழைவீழ்ச்சி பாசன நீர்த்தேவையை அதிகரிக்கச் செய்யும்
C. தேறிய பாசன நீர்த்தேவையைக் கணிக்கும்போது ஆழ ஊடுவடிதல், பக்கவாட்டான ஊடுவடிதல் (see page) ஆகியவற்றிலான இழப்புக்கள் கருத்திற் கொள்ளப்படும்

மேற்குறித்த கூற்றுக்களுள் சரியானது / சரியானவை

1) A மட்டுமாகும் 2) B மட்டுமாகும் 3) C மட்டுமாகும்
4) A, B ஆகியன மட்டுமாகும். 5) A,C ஆகியன மட்டுமாகும். (16)

PDE, NP

368. சால் நீர்ப்பாசனம் பொருத்தமாக அமைவது
1) இருவாட்டிமண் கொண்ட குன்றும் குழியுமான நிலத்திற்காகும்.
2) களிமண் அதிகம் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
3) மணல்மண் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
4) இருவாட்டிமண் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
5) மணல்மண் கொண்ட குன்றும் குழியுமான நிலத்திற்காகும். (16)

369. விவசாயியொருவர் செக்கனுக்கு 135 லீற்றர் எனும் வீதத்தில் பாயும் நீரை கால்வாயினூடாக தனது பயிர்செய் நிலத்திற்குத் திருப்பினார்.அவரால் களத்துக்குக் கிடைக்கப்பெற்ற நீரின் அளவு அளக்கப்பட்டபோது செக்கனுக்கு 100 லீற்றர் மட்டுமே கிடைத்ததெனத் தெரிய வந்தது. அவ்வாறெனின் இந்த நீர்ப்பாசன முறைமையின் நீரைக் கொண்டு செல்லும் வினைத்திறன்.
1) 50% 2) 60% 3) 64% 4) 74% 5) 135%
(17)

370. வகைக்குரிய துளிநீர்ப்பாசன முறைமையொன்று கொண்டிருப்பது
1) பம்பி அலகு அமுக்கக் கட்டுப்படுத்தி, பக்கக்குழாய்கள், உயரத்து குழாய்கள், துளிப்பான்கள் ஆகியனவாகும்.
2) பம்பி அலகு, அமுக்கக்கட்டுப்படுத்தி, பிரதான குழாய் வழிகள், உப பிரதான குழாய்வழிகள், பக்க குழாய்கள், துளிப்பான்கள் ஆகியனவாகும்.
3) பம்பி அலகு, வடிகட்டிகள், அமுக்கக் கட்டுப்படுத்தி, குழாய்வழிகள், பக்கக் குழாய்கள், பிணைப் பான்கள், துளிப்பான்கள் ஆகியனவாகும்.
4) பம்பி அலகு, அமுக்கக் கட்டுப்படுத்தி, அமுக்கமானி, பிரதான குழாய் வழிகள், பிணைப்பான்கள், பக்கக் குழாய்கள் ஆகியனவாகும்.
5) பம்பி அலகு, சேமிப்புத் தாங்கி, பிரதான குழாய் வழிகள், உப பிரதான குழாய் வழிகள், பக்கக் குழாய்கள் , தூவல் தலைகள் ஆகியனவாகும்.

❖ கீழே காட்டப்பட்டுள்ளது 2015 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட காலத்தின் மாதாந்தப் படிவு வீழ்ச்சி மற்றும் ஆவியாதலாவியுயிர்ப்பு ஆகியவற்றின் கோலமாகும். இந்த வரைபின் உதவியுடன் வினாவுக்கு விடையளிக்க.




371. மேற்படி வரைபுக்கமைய இக்களத்துக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டியது
1) ஜனவரி முதல் மே வரையாகும் 2) பெப்ரவரி முதல் யூன் வரையாகும்
3) மார்ச் முதல் செப்ரெம்பர் வரையாகும் 4) யூன் முதல் டிசம்பர் வரையாகும்
5) செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையாகும்.

## 14. பீடை முகாமைத்துவம்

372. வைரசுக்களை இனங்காண பயன்படுத்தும் ஆய்வுகூட சோதனை
1) நீர் பாயச் சோதனை 2) நுணுக்குக்காட்டிச் சோதனை 3) புலனுணர்வுச் சோதனை
4) சாறு வடிதல் சோதனை 5) பர்மான் வலை சோதனை (1)

373. தாவர நோய்த் தற்கூறுகளை அவதானித்த போது கீழ்வரும் அறிகுறிகள் காணப்பட்டன.
A - இலை மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் துரு நிறமான பொருட்கள் காணப்பட்டன.
B - இலைகள் பன்னிறப்பட்டிருந்தன.
C - இலைகள் சதபத்திரவுருவம் பெற்றுக் காணப்பட்டன.
D - இலை விளிம்புகள் மென்மை அடைந்திருந்ததுடன் சிறியனவாகக் காணப்பட்டன.

மேற்குறித்த நோய் அறிகுறிகளில் வைரசு நோய்க்குரியவை.
1) A,B மட்டும் 2) A, C மட்டும் 3) B, C மட்டும்
4) B, D மட்டும் 5) A, D மட்டும் (2)

374. தாழ்நிலக் களைகளை மட்டும் கொண்ட தொகுதி
1) குதிரைவால் புல், இஞ்சிப்புல், மொண்டி 2) தொட்டாற்சுருங்கி, மொண்டி, பூம்பூண்டு
3) காட்டு இறப்பர், குதிரைவால்புல், இஞ்சிப்புல் 4) தொட்டாற்சுருங்கி, காட்டு றப்பர் நாயுண்ணி
5) நாயுண்ணி, பூம்பூண்டு, தொட்டாற்சுருங்கி (2)

PDF, NP

375. பீடைக் கட்டுப்பாட்டில் மண்டபப்படுத்தல் (Quaratine) எனப்படுவது,
1) உயிரியல் பீடைக் கட்டுப்பாட்டு முறையாகும்.
2) இறக்குமதிகளை மட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் சட்டமாகும்.
3) வெளிநாட்டிலிருந்து நோயாக்கிகள் நாட்டினுள் புகுவதைத் தடுக்கும் பாதுகாப்பு வேலைத் திட்டமாகும்.
4) நெமற்றோடா நோய்கள் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னுமொரு பிரதேசத்திற்குப் பரவுவதைத் தடுக்கும் வேலைத்திட்டமாகும்.
5) களைகள் பரவுவதைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனக் கட்டுப்பாட்டு முறையாகும். (2)

376. 3ha பயிர் நிலம் ஒன்றிற்கு பூச்சி நாசினித் திரவக் கலவையை ஒருவர் சிவிறுகின்றார். சிவிறிறை இயக்குபவர் நடந்து செல்லும் வேகம் 30m / நிமிடம் வீச்சு முனையூடாக சிவிறப்படும் திரவக் கலவையின் அகலம் 1m எனில் பயிர்நிலம் முழுவதற்கும் கலவையை சிவிற எடுக்கும் காலம் எவ்வளவு?
1) 1000 நிமிடங்கள் 2) 1500 நிமிடங்கள் 3) 3000 நிமிடங்கள்
4) 3500 நிமிடங்கள் 5) கணிப்பிட தரவு போதாது (3)

377. எந்நோயாக்கியை இனங்காண ELISA சோதனை மேற்கொள்ளப்படுகின்றது?
1) பங்கசு 2) பற்றீரியா 3) வைரசு
4) நெமற்றோடா 5) பைற்றோ பிளாசுமா (3)

378. தாவரம் ஒன்றில் காணப்பட்ட நோயறிகுறிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. இறந்த கலங்களைக் கொண்ட புள்ளிகள் இலைகளில் காணப்படல்
B. இலைகளின் மேற்புறம், கீழ்ப்புறத்தில் துருநிற பொருட்கள் காணப்படல்
C. வேரிலும் தண்டு முகிழ்களிலும் மென் அழுகல் காணப்படல்

இந்நோயறிகுறிகளுக்கு காரணமாக அமையும் நோயாக்கி
1) பங்கசு 2) பற்றீரியா 3) வைரசு
4) நெமற்றோடா 5) பைற்றோபிளசுமா

❖ இலங்கையில் அதிகளவில் காணப்படும் களைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் வினா 375, 376 இற்கு விடையளிக்க.

A. மொண்டி B. இஞ்சுப்புல் C. பூம்பூண்டு
D. எருமை நக்கி E. குப்பைமேனி F. சீதேவியார் செங்கழுநீர்

379. தரப்பட்டுள்ளவற்றில் களி மண் சூழலில் அதிகம் காணப்படும் களைகள் எவை?
1) A, B மட்டும் 2) B, F மட்டும் 3) A, D, E மட்டும்
4) B, D, E மட்டும் 5) C, F மட்டும் (3)

380. அகன்ற இலைக் களைகளாக அமைபவை
1) A, B, C மட்டும் 2) B, C, E மட்டும் 3) B, D, F மட்டும்
4) A, D, F மட்டும் 5) D, E, F மட்டும் (3)

381. catoblastis cactorum எனப்படுவது
1) நெற்தாவரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் நோயாக்கி
2) உயிரியல் களை கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் இரைகௌவி
3) உயிரியல் களை கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் நோயாக்கி
4) பீடைகளைக் கட்டுப்படுத்தும் இரசாயனப் பதார்த்தம்
5) நோயாக்கிகளை அழிக்கும் ஓர் ஒட்டுண்ணித் தாவரம் (4)

382. பொலிமரேசு சங்கிலித் தாக்கம் (P. C. R) எனப்படுவது
1) கரு அமிலங்களின்படி, வைரசு இனங்காண்பதற்காகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் முறையியல்
2) வைரசின் DNA ஐ வெட்டப் பயன்படும் செயற்பாடு
3) தாவரங்களின் DNA ஐ பெருக்கமடையைச் செய்யும் முறை
4) DNA ஐ விகாரமடைய செய்யப்பயன்படுத்தும் ஓர் முறை
5) வைரசு நோய்களை தடுப்பதற்கு செய்யும் ஓர் முறையியல் (4

PDE, NP

383. அறுவடை பெறப்படும் போஞ்சி செய்கையொன்றில் அந்திரக்னோல் நோயை கட்டுப்படுத்துவதற்கு பங்கசு நாசினி ஆகஸ்ட் 05 திகதி பிரயோகிக்கப்பட்டது. அதன் முன் அறுவடைக்கால இடைவெளி 21 நாட்கள். காய்துளைப்பானை கட்டுப்படுத்த பூச்சி நாசினி ஆகஸ்ட் 10 ஆம் திகதி பயன்படுத்தப்பட்டது. அதன் முன் அறுவடைக் காலம் 14 நாட்களாகும். இந்த போஞ்சி செய்கையில் இருந்து அறுவடையைப் பெற உகந்த காலம் ஆகஸ்ட் மாதம்.

1) 14 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகும்
2) 21 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகும்
3) 24 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகும்
4) 26 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகும்
5) 30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகும் (4)

384. மென்னுடலிகளால் பயிர்ச் செய்கையில் ஏற்படுத்தும் சேதம்

1) வேர் இழையங்களை அரித்து உண்ணல்
2) தாவரச்சாற்றை குற்றி உறுஞ்சுதல்
3) வைரசு நோய்களைப் பரப்பல்
4) தாவர இழையங்களை சுரண்டி உண்ணல்
5) பச்சையத் தொகுப்பை நிரோதித்தல் (5)

385. ஆக்கிரமிப்புக் களை எனப்படுவது,

1) பிறிதொரு பிரதேசத்திலிருந்து அறிமுகமாகிய தாவரங்கள்
2) மனிதனின் பயிரில் சேதம் ஏற்படுத்தும் தாவரங்கள்
3) பயிர்ச் தாவரத்தை உருவவியலில் ஒத்த இயல்புடைய தாவரங்கள்
4) பொருளாதார ரீதியாக மனிதனுக்கு சேதத்தை ஏற்படுத்தும் சுதேச இனத் தாவரங்கள்
5) வேறு நாடுகளிலிருந்து அறிமுகமாகி பிரதேசம் முழுவதும் பரம்பலடைந்து பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் தாவரங்கள் (5)

386. செழிப்பாக வளர்ந்திருந்த பசளிச் செடியொன்று படிப்படியாக நலிவடைந்து செல்வதைக் கண்ட மாணவரொருவர் அதனைப்பிடுங்கி அவதானித்த போது அதன் வேர்த்தொகுதியில் சிறுமுடிச்சுகள் பல காணப்பட்டன. இந்நிலைமைக்குக் காரணமாக அமைவது

1) வட்டப் புழுத்தாக்கம்
2) பங்கசுத்தாக்கம்
3) வைரசுத் தாக்கம்
4) பூச்சித் தாக்கம்
5) போசணைக் குறைபாடு (6)

387. Bacillus thuringiensis என்பது

1) தாவரங்களில் நோய்களை உண்டாக்கும் Bacteria
2) இலெப்பிடோப்தெராக் குடம்பிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் Bacteria
3) தாவரங்களில் நோய்களை உண்டாக்கும் பங்கசு
4) உயிரியற் பீடைக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் பங்கசு
5) சிறைப்பைகளை உண்டாக்கும் வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் பற்றீரியா (6)

388. Hand Sprayer ஊடாக கரைசல் வெளியேறும் முறை தொடர்பாக

கூற்று A :- வளி மட்டும் வெளியேறும்
கூற்று B :- வளியும் கரைசலும் வெளியேறும்
கூற்று C :- கரைசல் மட்டும் வெளியேறும்

பின்வருவனவற்றுள் சரியான கூற்று அல்லது கூற்றுக்கள்

1) A, B மட்டும்
2) B, C மட்டும்
3) C மட்டும்
4) A, C மட்டும்
5) B மட்டும் (6)

389. 


படத்தில் P, Q, R, S இனால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சரியாகக் காட்டுவது

1) கைபிடி, குழாயீட்டி, தாங்கி, பீச்சுமுனை
2) பீச்சுமுனை, கைபிடி, தாங்கி, குழாயீட்டி
3) குழாயீட்டி, தோற்பட்டி, அமுக்கவறை, வால்பு
4) வால்பு, பீச்சுமுறை, கைபிடி, தாங்கி
5) குழாயீட்டி, கைபிடி, தாங்கி, பீச்சுமுனை

(6)

PDE, NP

390. நோய் கொண்ட தாவரப் பகுதிகளில் காணப்பட்ட அறிகுறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முடிச்சுக்கள்

B - இலைகளில் பன்னிறப் புள்ளிகள்

C- காய்களில் ஈரமான வட்டப்புள்ளிகள்

D - கலன் இழையங்கள் அழிவடைந்திருத்தல்

மேற்தரப்பட்ட நோய் அறிகுறிகளில் பற்றீரிய நோய்க்குரியவை

1) A, B மட்டும் 2) B, C மட்டும் 3) C, D மட்டும்

4) A, C, D மட்டும் 5) B, C, D மட்டும் (8)

391. பீடையை அழிப்பதற்கு செலவாகும் பணம், அப்பீடையின் பாதிப்புக்கள் காரணமாக ஏற்படும் இழப்பின் பெறுமதிக்கு சமனாக அமையும் பீடைக் குடித்தொகை மட்டம்

1) கொள்ளை நிலை 2) நிரம்பல் நிலை

3) பொருளாதார தாங்குமட்டம் 4) பொருளாதார சேத மட்டம்

5) சமநிலை பீடைக் குடித்தொகை

392. விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் உள்ள பயிர்களில் வாடலை அவதானித்தார். அதற்கான காரணத்தை வாடல் ஏற்பட்ட தாவரத்தில் சிறு தண்டை வெட்டினார். இதன்போது சிலந்தி நூல் போன்று நூல்கள் தோன்றுவதை அவதானித்தார். இதற்கான காரணமாக அமையக் கூடியது

1) பற்றீரியா தாக்கம் 2) வைரசுத் தொற்று 3) நீர் பற்றாக்குறை

4) போசணைக் குறைபாடு 5)காலநிலைத் தாக்கம்

(5)

393. கூற்று A : ELISA பரிசோதனையினது அடிப்படையாக அமைவது பிறபொருளெதிரியாக்கிக்கும் பிறபொருள் எதிரிக்கும் இடையிலான இடைத்தாக்கமாகும்.

கூற்று B : ELISA பரிசோதனையின்போது DNA யில் உள்ள அடங்கியுள்ள தகவல்கள் RNA ற்கு இடமாற்றப்படும்.

கூற்று C : ELISA பரிசோதனையின் போது Microtiter plate எனப்படும் தட்டு பயன்படுத்தப்படும்

ELISA தொடர்பான கூற்றுக்களில் மிகச் சரியானது?

1) AB 2) AC 3) BC 4) B மட்டும் 5) ABC எல்லாம் (9)

394. தாவர நோய்

1) உயிரியற்காரணிகளால் ஏற்படுத்தப்படுகின்றது.

2) தாவரத்திற்கு மாறா உறுத்தலை ஏற்படுத்துகின்றது.

3) தொடர்ச்சியாக பங்கசு நாசினிகளைப் பிரயோகிப்பதால் தடுக்கப்படலாம்.

4) தாவரத்தின் சாதாரண தொழிற்பாட்டைக் குழப்புவதாகக் கருதப்படலாம். (9)

5) மண்ணின் pH ஐ 6.5 இலிருந்து 7.5 வரையுள்ள வீச்சினுள்ளே பேணுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

395. சாறுறுஞ்சும் பூச்சிகளின் கூட்டம்

1) ஏபிட்டுக்கள், அவுலக்கப்போறா, நீள்மூஞ்சிவண்டு

2) ஏபிட்டுக்கள், செதிற்பூச்சிகள், அவுலக்கப்போறா

3) வெண்முட்டுப் பூச்சி, செதிற்பூச்சிகள், நீள்மூஞ்சிவண்டு

4) ஏபிட்டுக்கள், வெண்மூட்டுப்பூச்சி, அவுலக்கப்போறா

5) ஏபிட்டுக்கள், வெண்மூட்டுப்பூச்சிகள், செதிற்பூச்சிகள் (9)

396. படத்தில் தரப்பட்டுள்ள களைப்பூண்டு



1. சல்வீனியா 2) நீர் வாழை

3) நீர்க்கோவா 4) நீர்ச்சேம்பு 5) ஆகாயத்தாமரை

397. படத்தில் காட்டப்பட்டுள்ள வேர்த்தொகுதியில் ஏற்பட்டுள்ள தொற்றுக்குக் காரணம்



1) பற்றீரியா 2) பங்கசு 3) வைரசு

4) நெமற்றோடு 5) புரற்றசோவா (12)

398. மாணவரொருவர் தோளில் சுமக்கும் தெளிகருவியின் நெம்பினை இயக்கியபோதிலும் அமுக்கம் ஏற்படுத்தப்படவில்லை. இதற்காக அவர் பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டார்.

A - பீச்சுமுனை அல்லது கட்டுப்படுத்தி வால்வினுள் கழிவுகள் தேங்கியிருத்தல்

B - உள்ளிழு வால்வினுள் காணப்படும் குண்டு இறுகிக் காணப்படல்.

C - முசலத்துடன் பொருத்தப்பட்டுள்ள வண்ணத்துப் பூச்சிச் சுரை இளகிக் காணப்படல்

D - பீச்சுமுனையின் துளை மிகச் சிறியதாகக் காணப்படல்

PDF, NP

இவற்றுள் சரியானவை

1) A, B ஆகியன மட்டும் 2) A, C ஆகியன மட்டும் 3) A, D ஆகியன மட்டும்
4) B, C ஆகியன மட்டும் 5) B, D ஆகியன மட்டும் (12)

399. பீடைகளின் விருத்திப் பருவங்களில் கட்டுப்படுத்த மிகவும் இலகுவான பருவம்
1) நிறையுடலி 2) முட்டை 3) அணங்கு 4) குடம்பி 5) கூட்டுப்புழு (14)

400. ஒளியினால் கவரப்படாத மிகச்சிறிய பூச்சிகளை கட்டுப்படுத்தும் சூழல் நேயமான முறை
1) ஒளி பொறியைப் பயன்படுத்தல் 2) கிறிஸ் பூசப்பட்ட தட்டைப் பயன்படுத்தல்
3) பெரோமோன் பொறியினைப் பயன்படுத்தல் 4) சிறிய வலைகளினைப் பயன்படுத்தல்
5) மின்சாரப் பொறிகளினைப் பயன்படுத்தல் (14)

401. வட்டப்புழு நோயை இனங்காண மேற்கொள்ளப்படும் ஆய்வுகூடப் பரிசோதனை
1) நீர்ப்பாயச் சோதனை 2) பரம்பரையலகுச் சோதனை 3) பேர்மான் புனல் சோதனை
4) சாறு வடிதற் சோதனை 5) வளர்ப்பூடகத்தில் வளர்க்கும் சோதனை (15)

402. அறுவடை பெறப்படும் போஞ்சி செய்கையொன்றில் அந்திரக்னோல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு புரொப்பிகொனசொல் பங்கசு நாசினி ஆகஸ்ட் 02 திகதி பிரயோகிக்கப்பட்டது. அதன் முன் அறுவடைக்கால இடைவெளி 21 நாட்களாகும். இந்தச் செய்கைக்கு காய்துளைப்பானைக் கட்டுப்படுத்த தயோடிகப் ஆகஸ்ட் 05 ஆம் திகதி பயன்படுத்தப்பட்டது. அதன் முன் அறுவடைக் காலம் 14 நாட்களாகும். இந்த போஞ்சிச் செய்கையிலிருந்து அறுவடையைப் பெற உகந்த காலம் ஆகஸ்ட் மாதம்.
1) 14 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகும் 2) 16 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகும்
3) 19 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகும் 4) 21 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகும்
5) 23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகும் (15)

403. பின்வருவன தாவர நோய்கள் பற்றிய சில கூற்றுக்கள் ஆகும். அவற்றுள் மிகச் சரியான கூற்றாக அமைவது
1) தாவரமொன்று நோய்நிலைமைக்கு ஆளாகும்போது தாவர உற்றொழிலியல் செயன்முறைகள் பாதிக்கப்படும்
2) தாவரமொன்று நோய்வாய்ப்படுவதற்கு நுண்ணங்கிகள் மட்டுமே காரணமாக அமையும்
3) தாவரத்தில் நோய்நிலைமை தென்படும் சந்தர்ப்பத்தில் அதன் நோய்நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகும்.
4) தாவரத்தில் நோய்நிலைமைக்கு ஆளாகும்போது அத்தாவரம் வெளிக்காட்டும் நோயறிகுறிகள் மூலமாக நோய்க்குக் காரணமான நுண்ணங்கி இனத்தை இனங்காண முடியும்
5) தாவர நோய்களுக்குக் காரணமான நுண்ணங்கி வகையை இனங்காண விசேட சோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். (15)

404. விவசாயியொருவர் பீடைக்கட்டுப்பாட்டுக்கென தனது வயலில் ஒளிப்பொறியொன்றை நிறுவியுள்ளார். இந்தக் கட்டுப்பாட்டு முறை மிகப் பொருத்தமாக அமைவது
1) பறவைகளைக் கட்டுப்படுத்துவதற்காகும் 2) பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காகும்
3) கொறிபயிர்களைக் கட்டுப்படுத்துவதற்காகும் 4) மொலஸ்காக்களைக் கட்டுப்படுத்துவதற்காகும்
5) முலையூட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காகும்

405. ஓராண்டு களைகளைக் கட்டுப்படுத்த உகந்த அதிக வினைத்திறன் கொண்ட முகாமைத்துவக் கோட்பாடானது,
1) சர்வ களை நாசினிகளை விசிறுதலாகும்
2) அக்களைகள் வித்துக்களை உருவாக்குவதைத் தடுத்தலாகும்.
3) களைகளை வெட்டி எரித்து விடல் ஆகும்
4) நாற்றுமேடையில் உள்ள களைகள் அனைத்தையும் அகற்றுதலாகும்
5) வயலில் உயிரியல் களைக் கட்டுப்பாட்டுக் காரணிகளை அறிமுகஞ்செய்தலாகும்.

406. விவசாயியொருவரிடம் 16 லீற்றர் தாங்கிக் கொள்ளளவுடைய தோளில் சுமக்கும் வகைத் தெளிகருவி (நாப்சாக்) உள்ளது. அவருடைய ஒரு ஹெக்ரேயர் வயலில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கென 2, 4 - D களைநாசினி 1.6 லீற்றர் விசிறப்பட வேண்டியுள்ளது. அவரது வயலுக்கு 160 லீற்றர் களை நாசினிக் கலவையைத் தெளிக்குமாறு விவசாயப் போதனாசிரியர் அறிவுறுத்தியுள்ளார். ஒவ்வொரு தாங்கியிலும் கலக்கப்பட வேண்டிய 2, 4 - D யின் அளவு யாது?
1) 0.16ml 2) 1.60ml 3) 16.00ml 4) 160.00ml 5) 1600.00 ml (16)

407. ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம்
1) மரபுரீதியான பீடைக்கட்டுப்பாட்டு முறையாகும்
2) பல்வேறு வகைப்பட்ட உத்திகள் பயன்படுத்தப்படும் முறைமை அணுகுமுறை (System approach) ஆகும்.
3) அனைத்துப் பீடைப் பிரச்சினைகளுக்குமென ஓர் உத்தியை மேம்படுத்தலாகும்
4) பீடைகளை அழிக்கக் கூடிய மிகவும் இலாபகரமான முறையாகும்
5) அதன் பிரதான உபாயமாக உயிரியற் கட்டுப்பாட்டு முறைகள் கொள்ளப்படும் (17)

❖ வினா 408 இற்கு விடையளிக்க பின்வரும் வரிப்படத்தைப் பயன்படுத்துக.




408. தாவரப் பீடை முகாமைத்துவத்தில் மேற்படி ஒழுங்கமைப்பு பிரதானமாகப் பயன்படுத்தப்படுவது
1) மண்வாழ் பற்றீரியாக்களை வேறாக்கவும் கணக்கிடுவதற்குமாகும்
2) சுயாதீனவாழி நெமற்றோட்டுக்களை வேறாக்கவும் கணக்கிடுவதற்குமாகும்.
3) மண்ணில் அடங்கியுள்ள களை வித்துக்களை வேறாக்கவும் கணக்கிடுவதற்குமாகும்
4) மண்ணில் அடங்கியுள்ள பக்க வித்திகளை வேறாக்கவும் கணக்கிடுவதற்குமாகும்
5) மண்ணில் உள்ள பீடைகளின் முட்டைக் குவியல்களை வேறாக்கவும் கணக்கிடுவதற்குமாகும். (17)

409. 20 ஆம், 21 ஆம் வினாக்கள் கீழ்த்தரப்பட்ட களைகளை அடிப்படையாகக் கொண்டவை
a. ஹந்தவாரை b. மருக்கி c. பூம்பூண்டு
d. சீதேவியார் செங்கழுநீர் e. குப்பைமேனி f. தொட்டாற்சுருங்கி

410. மேலே தரப்பட்ட களைகளில் ஓராண்டுக் களைகளை மட்டும் உடைய தொகுதி
1) a, b, c, f 2) b, c, d 3) c, d, e 4) a, d, e, f 5) b, d, e, f

411. மேலே தரப்பட்டுள்ள களைகளில் வளிமண்டல நைதரசனை மண்ணில் பதிக்கக்கூடிய களை / களைகள்
1) c மட்டும் 2) d மட்டும் 3) f மட்டும் 4) c, e மட்டும் 5) b,e மட்டும்

PDE, NP

## 15. கால்நடை உற்பத்தி

412. பாலிலுள்ள கொழுப்பு சதவீதத்தை துணிவதன் மூலம் பாலுடன் எப்பொருள் கலப்படம் செய்யப்பட்டுள்ளதை அறிய முடியும்?

1) யூரியா 2) தேங்காய்ப்பால் 3) சுக்குரோசு
4) நீர் 5) பால்மா (01)

413. செயற்கை முறைச் சினைப்படுத்தல் படிமுறைகளைச் சரியான ஒழுங்கில் குறிப்பிடுவது.

1) சுக்கிலத்தை சேகரித்தல், ஐதாக்குதல், மதிப்பீடு, குளிர்த்தல்.
2) சுக்கிலத்தை சேகரித்தல், குளிர்த்தல், மதிப்பிடுதல், ஐதாக்குதல்
3) சுக்கிலத்தை சேகரித்தல், மதிப்பிடுதல், ஐதாக்குதல், குளிர்த்தல்
4) சுக்கிலத்தை சேகரித்தல், மதிப்பிடல், களஞ்சியப்படுத்தல், ஐதாக்குதல்
5) சுக்கிலத்தை சேகரித்தல், ஐதாக்குதல், மதிப்பிடுதல், களஞ்சியப்படுத்தல் (1)

414. தீவிரமுறையில் கால்நடைகள் வளர்ப்பின் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் மாசுறுதலை தவிர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கையாக அமைவது

1) திறந்தவெளி முறையில் மாடுகளை வளர்த்தலை ஊக்குவித்தல்
2) கால்நடைக் கழிவுகளை நேரடியாக வயலில் சேர்த்தல்
3) கொல்களக் கழிவுகளிலிருந்து கால்நடை உணவைத் தயாரித்தல்.
4) கால்நடைக் கழிவுகளை நீர் நிலைகளிற்குள் சேர்த்தல்.
5) உயிர்வாயு உற்பத்தி அலகிற் மூலப்பொருட்களாக பண்ணைக் கழிவுகள் பயன்படுத்தல். (1)

415. செயற்கைமுறைச் சினைப்படுத்தல் படிமுறையைச் சரியாக குறிப்பது

1) விந்துக்களை சேகரித்தல், ஐதாக்குதல், மதிப்பீடு செய்தல், களஞ்சியப்படுத்தல்
2) விந்துக்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், ஐதாக்குதல், மதிப்பீடு செய்தல்
3) விந்துக்களை சேகரித்தல், மதிப்பீடு செய்தல், ஐதாக்குதல், களஞ்சியப்படுத்தல்
4) விந்துக்களை சேகரித்தல், மதிப்பீடு செய்தல், களஞ்சியப்படுத்தல், ஐதாக்குதல்
5) விந்துக்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், மதிப்பீடு செய்தல், ஐதாக்குதல் (3)

416. பால், முட்டை என்பவற்றில் அதிகளவில் காணப்படும் புரதத்தை முறையே குறிப்பது

1) மயோசின், லக்ரோசு 2) லக்ரோசு, அல்புமின் 3. கேசின், அல்புமின்
4) அல்புமின், மயோசின் 5) லக்ரோசு, கரட்டின் (3)

417. பசுக்களில் வேட்கைக்கால ஒருமுகப்படுத்தலில் பயன்படுத்தப்படும் ஓமோன் எது? (3)

1) புரோஜெஸ்ரோன் 2) இன்சுலின் 3) ஒக்சிரோசின்
4) தெஸ்தெஸ்திரோன் 5) புரோலக்ரின்

418. கால்நடைப்பராமரிப்பில் வளிவெளியிழு விசிறிகள் பயன்படுத்துவது

1) வெப்பநிலையை அதிகரிக்க
2) வெளியில் இருந்து குளிர்காற்றை உள்ளீர்க்க
3) வெப்பக்காற்றை உள்விட
4) ஈரப்பதனை அதிகரிக்க
5) சூடான வளியை வெளியேற்ற (3)

419. பசுவின் வேட்கை வட்டத்தின் செல்வாக்குச் செலுத்தும் இலிங்க ஓமோன் அல்லாதது

1) FSH 2) புரொஜெஸ்ரோன் 3) ஓட்சிரோசின்
4) புரோஸ்ரோகிளண்டின் 5) ஈஸ்திரஜன் (4)

420. செயற்கைமுறை சினைப்படுத்தல் படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

a - ஐதாக்குதல்
b - மதிப்பீடு
c - விந்துக்களை சேகரித்தல்
d - குளிர்த்தல், களஞ்சியப்படுத்தல்

மேலே தரப்பட்ட படிமுறைகளை சரியான ஒழுங்கு முறையில் குறிப்பிடுவது.

1) a,b,c,d 2) c,b,a,d 3) b,a,c,d 4) b,c,a,d 5) c,a,b,d (4)

PDE, NP

421. முட்டையின் தரம் பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முட்டையின் அக, புற இயல்புகள் முட்டையின் தரத்தை தீர்மானிக்கும்.

B - வர்த்தக நோக்கத்தில் உற்பத்தியாகும் முட்டைகளின் அக இயல்புகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

C - முட்டையின் புற இயல்பிற்கு அமைவாக வகுப்பு AA, வகுப்பு A, வகுப்பு B என தரம் பிரிக்கப்படுகிறது.

தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும் 4) A,B மட்டும் 5) A,B,C எல்லாம் (4)

422. உலக சுகாதார நிறுவனத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட தலா நபர் மீன் நுகர்வு நாள் ஒன்றிற்கு

1) 30g 2) 45g 3) 60g 4) 75g 5) 100g (4)

423. விலங்கு வளர்ப்பு தொடர்பான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

A - திறந்தவெளி வளர்ப்பில் விளைச்சலின் அளவு குறைவானது.

B - தீவிர வளர்ப்பு முறையில் தன்னியக்க நுட்பங்களின் பயன்பாட்டால் விளைச்சலை அதிகரிக்க முடியும்.

C - விலங்கு வளர்ப்பு முறை விளைச்சலின் தரத்தில் செல்வாக்குச் செலுத்தும்.

மேற்தரப்பட்டவற்றில் சரியானது / சரியானவை

1) A மட்டும் 2) B மட்டும் 3) A,C மட்டும் 4) B,C மட்டும் 5) A,B,C எல்லாம் (5)

424. மஞ்சட் சடலத்தின் அழிவைத் தூண்டும் ஓமோன்

1) LH 2) FSH
3) புரஜஸ்ரோன் 4) ஈஸ்திரோஜன் 5) புரஸ்டோகிளான்டின் (5)

425. மீ சூலிடல் (Super Ovulation) எனப்படுவது முளைய இடமாற்றத்தின் ஒரு படிமுறையாகும். இந்த படிமுறையில் பயன்படுத்தப்படும் ஓமோன்.

1) FSH 2) புரொஜெஸ்ரோன் 3) ஈஸ்ரஜன்
4) LH 5) Gn RH (16)

426. AA தர முட்டை தொடர்பான கூற்றுக்களுள் மிகச் சரியானது

1) சிறியளவிலான குருதி அல்லது தசைப் பொட்டுக்களை காணலாம்.
2) காற்றிடைவெளி உயரத்தில் $\frac{3}{16}$ அல்லது குறைவாகக் காணப்படும்
3) மஞ்சட்கரு, பயன்படுரீதியில் குறைபாடுகளற்றிருத்தல் வேண்டும்.
4) முளைய விருத்தியை தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
5) வெண்கரு திரவியமாக காணப்பட வேண்டும். (6)

427. வேட்கை வட்டத்தின், சூல் வளர்ச்சியின் முதல் கட்டமாக அமைவது

1) ஒரு கலக்கூட்டம் உருவாதல்
2) முட்டைக் குழியம் உருவாதல்
3) சூல் புடைப்பு உருவாதல்
4) கிராபியன் புடைப்பு உருவாதல்
5) துணை முட்டைக் குழியம் உருவாதல். (6)

428. 

படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்

1) மைய நீக்கி
2) பியுற்றோமானி
3) லக்ரோமானி
4) வெப்பமானி
5) பாலடர்த்திமானி (8)

PDE, NP

429. கால்நடை வளர்ப்புத் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பண்ணைகளில் தானியங்கி உணவு மற்றும் நீர்ப் பாத்திரங்களைப் பயன்படுத்துவதனால் தொழிலாளர்த் தேவையை குறைக்க முடியும்.

B - தீவிர வளர்ப்பு முறையில் பண்ணைகளை பராமரிக்க தொழில்நுட்ப அறிவு கொண்ட தொழிலாளர்கள் அவசியம்.

மேற்தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1) A சரி B தவறானது
2) B சரி A தவறானது
3) A,B இரண்டும் சரி
4) A,B இரண்டும் சரி A யினால் B மேலும் தெளிவாகின்றது.
5) A,B இரண்டும் சரி B யினால் A மேலும் தெளிவாகின்றது. (8)

430. இயற்கையான புணர்ச்சியின் போது, செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் போது சுக்கிலம் விடுவிக்கப்படுவது

1) யோனிமடல் (vagina) பகுதி, கருப்பைக் கழுத்துப்பகுதியாகும்.
2) கருப்பைக் கழுத்துப்பகுதி, கருப்பைக் கழுத்துப்பகுதியாகும்.
3) கருப்பைக் கழுத்துப்பகுதி, யோனிமுகத்திலாகும்.
4) யோனிமடல் பகுதி, யோனி முகம்
5) கருப்பைக் கழுத்து, யோனி மடல் (9)

431. இறைச்சியின் தரத்தை பரிசீலிக்கப் பயன்படுத்தப்படும் பௌதீகமுறை

1) நிறம் 2) மணம் 3) நீர்ச் செயற்பாடு 4) pH 5) இழையமைப்பு (9)

432. பாலில் உள்ள கொழுப்பு சதவீதத்தை துணிய பயன்படுத்தப்படும் உபகரணம்.

1) இலக்ரோ மானி 2) பியூற்ரோ மானி 3) நீர மானி
4) தன்னீர்ப்புக்கும்பி 5) அளவுச்சாடி (9)

433. 270 கிலோ கிராம் நிறையுள்ள போது சினைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பசுவின் முதிர்நிலை உடல் நிறை.

1) 270 kg 2) 360 kg 3) 405 kg 4) 540 kg 5) 810 kg (11)

434. ஒரு பாற்பண்ணையாளன் பால் சேகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு வந்த பாலிலிருந்து ஒரு மாதிரியைப் பெற்று அதனுடன் கிளிசரின் சில துளிகள் சேர்க்கப்பட்ட போது அப்பால் மாதிரி சிவப்பு நிறமாக மாறியது. அப்பாற் பண்ணையாளர் கொண்டு வந்த பாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக அனுமானிக்கத்தக்க பொருள்

1) நீர் 2) உப்பு 3) கோதுமை மா 4) தேங்காய்ப்பால் 5) போமலின் (11)

435. தீவிர முறையில் கால்நடைகள் வளர்ப்பின்போது ஏற்படக்கூடிய சுற்றாடல் மாசுறுதலை தவிர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கையாக அமைவது

1) திறந்தவெளி முறையில் மாடுகளை வளர்த்தலை ஊக்குவித்தல்.
2) கால்நடைக் கழிவுகளை நேரடியாக வயலில் சேர்த்தல்
3) கொல்களக் கழிவுகளிலிருந்து கால்நடை உணவைத் தயாரித்தல்.
4) கால்நடைக் கழிவுகளை நீர் நிலைகளிற்குள் சேர்த்தல்.
5) உயிர்வாயு உற்பத்தி அலகிற் மூலப்பொருட்களாக பண்ணைக் கழிவுகளை பயன்படுத்தல். (11)

436. பசு ஒன்றின் வேட்கை வட்ட காலம் 21 நாட்களாகும். இங்கு பசு வேட்கை அறிகுறியை தூண்டுவதற்குரிய ஓமோன்.

1) புரஜெஸ்ரோன் 2) FSH 3) ஈஸ்ரஜன்
4) LH 5) ஓட்சிரோசின்

437. துப்பரவானதும், உடையாததும், அழுத்தமான மேற்பரப்பை உடைய நீள்வட்ட வடிவானதும், காற்றிடைவெளி 1/8" விட குறைவாகவும், காணப்பட்டால் அம்முட்டையின் தரம்,

1) வகுப்பு AA 2) வகுப்பு A 3) வகுப்பு B
4) வகுப்பு AB 5) நிராகரிக்கப்பட்ட முட்டை (11)

PDE, NP

438. செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் போது பசுவினது இனப்பெருக்கத் தொகுதியில் விந்துக்கள் இடப்படும் பகுதி.

1) சூலகம் 2) யோனிமடல் 3) சூற்கான்
4) பலோப்பியன் குழாய் 5) கருப்பைக்கழுத்து (11)

439. ஆரோக்கியமான காளை மாட்டிலிருந்து ஒரு தடவை சேகரிக்கப்படும் சுக்கிலத்தின் சராசரி அளவானது

1) 2 - 5 ml 2) 10 - 12 ml 3) 15 - 20 ml
4) 20 - 25 ml 5) 25 - 30 ml (11)

440. பாலில் கொழுப்பு அல்லாத திண்மப் பதார்த்தச் சதவீதத்தைத் துணிதலில் முக்கியமாக அமைபவை.

1) இலற்றோசு வெல்ல அளவும் புரத அளவும்
2) தோற்ற அடர்த்தியும் இலற்றோசின் அளவும்
3) குளோபுலின் அளவும் கேசீன் அளவும்
4) கொழுப்புச் சதவீதமும் கேசின் அளவும்
5) தன்னீர்வையும் கொழுப்புச் சதவீதமும் (11)

441. பால் மாதிரியொன்றின் பால்மானி (Lactometer) வாசிப்பு 1.020 ஆக இருந்தது. அப்பாலுடன்,

1) நீர் கலக்கப்பட்டுள்ளது. 2) ஆடை நீக்கிய பால் கலக்கப்பட்டுள்ளது.
3) போமலின் கலக்கப்பட்டுள்ளது. 4) தேங்காய்ப்பால் சேர்க்கப்பட்டுள்ளது.
5) இலற்றோசு வெல்லம் சேர்க்கப்பட்டுள்ளது. (11)

442. ஒரு பாற் பண்ணையாளன் பால் சேகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு வந்த பாலிலிருந்து ஒரு மாதிரியைப் பெற்று அதனுடன் கிளிசரின் சில துளிகள் சேர்க்கப்பட்ட போது அப்பால் மாதிரி சிவப்பு நிறமாக மாறியது. அப்பாற் பண்ணையாளர் கொண்டு வந்த பாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக அனுமானிக்கத்தக்க பொருள்.

1) நீர் 2) உப்பு 3) கோதுமை மா 4) தேங்காய்ப்பால் 5) போமலின் (12)

443. கால்நடை வளர்ப்பினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக 4R எண்ணக்கருவை பின்பற்றி கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டம் கடைப்பிடிக்கப்படுகின்றது. 4R என்பது,

1) Reduce, Reject, Recycle, reuse
2) கூட்டெரு தயாரித்தல், உயிர்வாயு தயாரித்தல்.
3) Reduce, Reuse, Recycle, Repair
4) சேதனப் பசளை பாவனை, உயிர்வாயு தயாரித்தல்.
5) எரித்தல், குழி தோண்டிப் புதைத்தல் (12)

444. பின்வருவன பசுவின் இனப்பெருக்கம் பற்றிய மூன்று கூற்றுகளாகும்.

A - வேட்கை வட்டத்தின் சராசரிக்காலம் 21 நாட்களாக இருக்கின்ற போதிலும் அதன் நீட்சிக்காலம் வருக்கத்தைச் சார்ந்து சிறிதளவில் மாறுபடும்.

B - இந்திய மாட்டு இனத்தினதும் எருமைப்பசுவினதும் வேட்கை வட்டத்தின் சராசரிக் காலங்கள் ஒரே அளவானவை.

C - வேட்கை வட்டத்தின் காலம் வேட்கைக்கால ஒருமுகப்படுத்தலினால் மாற்றப்படலாம்.

மேற்குறித்த கூற்றுகளுள் சரியானவை.

1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) C மாத்திரம்
4) A,B மாத்திரம் 5) B,C மாத்திரம் (12)

445. பால் மாதிரியொன்றின் தன்னீர்ப்பு 1.028 ஆகும். அதன் கொழுப்புச் சதவீதம் 3.5% ஆகும். இதற்கமைய அந்தப் பாலிலுள்ள திண்மப் பதார்த்தங்களின் சதவீதமானது.

1) 1.4365% ஆகும் 2) 1.132% ஆகும் 3) 7.2957% ஆகும்
4) 17.598% ஆகும் 5) 7.71% ஆகும் (12)

446. தரமான சுக்கிலமானது

1) முன்னோக்கி இயங்கும் விந்துக்கள் 30% இலும் அதிகம் காணப்படும்.
2) நியம வடிவம் கொண்ட விந்துக்கள் 40% இலும் அதிகம் காணப்படும்.
3) ஒரு வெளிப்படுத்தலின் போது இரண்டு பில்லியன் விந்துக்கள் காணப்படும்.
4) நீர்த்தன்மை உடையதாகக் காணப்படும்.
5) ஒரு கன அலகில் உள்ள விந்துக்களின் எண்ணிக்கை இருபது மில்லியன் ஆகும். (13)

PDE, NP

447. விந்துக்களினது மிகைக்குளிர் நிலைக்காப்பில் சேர்க்கப்படும் கிளிசரோலானது
1) விந்துக்களுக்கு போசணையை வழங்கும்.
2) விந்துக்களுக்கு வழுவழுப்பு தன்மையை வழங்கும்.
3) விந்துக்களின் இயங்கும் தன்மையைக் குறைக்கும்.
4) விந்துக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும்.
5) விந்துக்கள் நச்சுத்தன்மையினால் பாதிப்படைதலைத் தடுக்கும் (14)

448. தட்டு இடமாற்றல் தொகுதிகளில் பாச்சராக்கம் நிகழும் சந்தர்ப்பத்தில்
1) முதலாவது பகுதியில் வெப்பம் மீள் உருவாக்கப்படும்.
2) இரண்டாவது பகுதியில் குளிர்தல் நிகழும்.
3) மூன்றாவது பகுதியில் வெப்பமாக்கல் நிகழும்.
4) முதலாவது மற்றும் மூன்றாவது பகுதியில் வெப்பமாக்கல் நிகழும்.
5) இரண்டாவது மற்றும் மூன்றாவது பகுதியில் வெப்பமாக்கல் நிகழும். (14)

449. 4R எண்ணக்கருவில் Reduce இனை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது
1) கழிவுப் பொருட்களை ஒரே தடவையில் அகற்றுதல்.
2) கழிவுப் பொருட்களை குறைப்பதற்காக வேறு மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல்.
3) மூலப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல்.
4) தீங்கு விளைவிக்காத அசேதன பதார்த்தங்களை அதிகளவில் பயன்படுத்துதல்.
5) மூலப் பொருட்களை பயன்படுத்தலைக் குறைத்தல். (14)

450. செயற்கை முறைச் சினைப்படுத்தலில் கருக்கட்டல் சதவீதம் உயர்வடைவதற்கு சுக்கிலம் விடுவிக்கப்படுவது
1) கருப்பையின் கழுத்துப்பகுதியில் 2) கருப்பை உடலினுள்
30 கருப்பைக்கொம்பு 4) யோனி முகம் 5) யோனி மடல் (14)

451. வழமையாக பசுக்களில் புரஸ்ரோகிளான்டினின் தொழிற்பாடு நடைபெறுவது
1) மாதவிடாயின் முன் அவத்தையில் 2) மாதவிடாய் அவத்தையில்
3) மாதவிடாய் பின் அவத்தையில் 4) மாதவிடாய் இடை அவத்தையில்
5) மாதவிடாய் இடை அவத்தையின் பிற்பகுதியில் (14)

452. நுண்ணுயிர்க்கொல்லி வழங்கப்படும் காலப்பகுதியில் அந்தப் பசுவிலிருந்து பெறப்படும் பாலை நேரடியாக நுகர்விற்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கான காரணம்
1) நுண்ணுயிர்க்கொல்லிகள் காரணமாக பால் திரைதலாகும்.
2) நுகர்வோர் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு உணர்திறன் கொண்டோராகக் காணப்படலாகும்.
3) அதில் அதிக எண்ணிக்கையான பற்றீரியாக்கள் காணப்படலாகும்.
4) அதில் தனித்துவமான மணம் ஏற்படலாகும்.
5) அதன் நிறத்தில் மாற்றம் ஏற்படலாகும். (15)

453. முட்டைகளின் தரத்தை அளவிடும்போது "ஹோ அலகுப் பெறுமானம்" (Haugh units score) முக்கியமானதாகும். இந்த அளவீட்டின்போது பயன்படுத்தப்படும் பரமானங்களாவன.
1) தடித்த அல்பியூமின் படையின் நீளம், அகலம் ஆகியனவாகும்.
2) மஞ்சட்கருவின் உயரம் மற்றும் விட்டம் ஆகியனவாகும்.
3) தடித்த அல்பியூமின் படையின் உயரம், முட்டையின் உயரம் ஆகியனவாகும்.
4) மஞ்சட்கருவின் உயரம், முட்டையின் நிறை ஆகியனவாகும்.
5) தடித்த அல்பியூமின் படையின் உயரம், மஞ்சட்கருவின் உயரம் ஆகியனவாகும். (15)

454. பேரளவில், செறிவான முறையில் வளர்க்கப்படும் மாட்டுப் பண்ணையொன்றில் சேரும் சாணம், சிறுநீர் ஆகியவற்றை உரியவாறு முகாமைசெய்வது முக்கியமானதாகும். இதற்கெனப் பயன்படுத்தக்கூடிய முகாமைத்துவ அணுகு முறையாக அமைவது அவற்றை
1) குழிகளில் தேக்கிவைத்துப் பின்னர் பாசனநீருடன் வயலுக்குப் பிரயோகித்தலாகும்.
2) உயிர்வாயுப் பிறப்பாக்கியின் மூலப்பொருளாக பயன்படுத்தலாகும்.
3) பாரிய குவியல்களாகக் குவித்து காய்ந்த பின்னர் பண்ணையிலிருந்து அகற்றுதலாகும்.
4) உலர்த்திய பின்னர் எரித்து எஞ்சும் சாம்பலை பசளை உற்பத்திக்காகப் பயன்படுத்தலாகும்.
5) நாளாந்தம் பசளையாக வயலிற்கு இடுதலாகும். (15)

PDF, NP

455. இலூற்றினாக்கும் ஓமோன் (LH) பசுமாடுகளில்
1) புடக விருத்திக்கு உதவும்.
2) கருக்கட்டலுக்கு உதவும்.
3) கருப்பை அகவணி நிலவுகைக்கு உதவும்
4) சூலிடலுக்கு உதவும்.
5) முளைய வளர்ச்சிக்கு உதவும். (15)

456. வர்த்தக ரீதியிலான கோழி வளர்ப்பின்போது பயன்படுத்தப்படும் மூடிய மனை முறைமையில்,
1) கோழியொன்றுக்கு வழங்கப்படும் இடவசதி அதிகமாகும்.
2) நோய் பரவுவதற்கான வாய்ப்பு குறைவாகும்.
3) மனையின் ஒரு பகுதி புறச்சூழலுக்குத் திறந்திருக்கும்.
4) தன்னியக்க, தன்னியக்கமற்ற உணவு வழங்கல் முறைமைகள் பயன்படுத்தப்படும்.
5) மனையினுள் காற்றோட்டத்தை ஏற்படுத்த இடையிடையே மின்விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கும்
(16)

457. ஆழ்குளிரூட்டப்பட்ட சுக்கிலம் சேமிக்கப்படுவது
1) பனிக்கட்டியிலாகும்.
2) திரவ காபனீரொட்சைட்டிலாகும்.
3) திரவ நைதரசனிலாகும்.
4) நைதரசன் வாயுவிலாகும்.
5) உலர் பனிக்கட்டியிலாகும்.

458. இலக்ரோமானியைப் பயன்படுத்தி அளவிடப்படுவது

1) கொழுப்பு சதவீதமாகும்
2) அமிலத்தன்மையாகும்
3) தன்னீரப்பாகும்
4) அற்ககோலின் அளவாகும்.
5) பழுதடையாத தன்மையாகும். (16)

459. பாலில் அளவிடப்படும் பரிமானங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - கொழுப்புச் சதவீதம்
B - கொழுப்பு அல்லாத திண்மப் பதார்த்தங்களின் சதவீதம்.
C - தன்னீர்ப்பு

மேலே தரப்பட்டுள்ளனவற்றுள், இலங்கையிலுள்ள பால் சேகரிப்பு நிலையங்களில் பாலின் விலை தீர்மானிக்கப்படுவது,
1) Aயின் மூலம் மாத்திரமாகும்.
2) Bயின் மூலம் மாத்திரமாகும்.
3) A,B ஆகியவற்றின் மூலம் மாத்திரமாகும்.
4) A,C ஆகியவற்றின் மூலம் மாத்திரமாகும்.
5) A,B,C ஆகிய அனைத்தின் மூலமுமாகும். (17)

460. பின்வருவன செயற்கைமுறைச் சினைப்படுத்தல் தொடர்பான இரண்டு கூற்றுகள் வருமாறு
A - இலங்கையில் மாடுகளின் இனவிருத்தியின்போது அதிக தரம் கொண்ட எச்சங்களைப் பெறுவதற்கான வெற்றிகரமான முறை செயற்கைமுறை சினைப்படுத்தல் ஆகும்.
B - பல்வேறு மாட்டு வர்க்கங்களின் உயர்தரமான காளைகள் மட்டும், சுக்கிலச் சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படும்.

மேற்படி கூற்றுகளுள்,

1) A உண்மையானது
2) B உண்மையானது
3) A,B ஆகிய இரண்டும் உண்மையானவை.
4) A உண்மையாக அமைவதுடன் B மூலமாக A மேலும் விளக்கப்படுகிறது.
5) B உண்மையாக அமைவதுடன் A மூலமாக B மேலும் விளக்கப்படுகிறது. (17)

PDE, NP

461. வேட்கைக்கால ஒருமுகப்படுத்தல் பிரதானமாகப் பயன்படுத்தப்படுவது
1) பசுக்கன்றுகளுக்காகும்
2) வற்றுப் பசுக்களுக்காகும்.
3) இனவிருத்திக் காளைகளுக்காகும்.
4) இனவிருத்தி ஒழுங்கீனம் கொண்ட பசுக்களுக்காகும்.
5) கர்ப்பமுற்றிராத பசுக்களுக்காகும். (17)

462. புரொயிலர்க் கோழி வளர்ப்புக் கைத்தொழிலில் ஏற்படும் வளி மாசடைதலைக் குறைப்பதற்கு, மேற்கொள்ளத்தக்க மிக உகந்த நடவடிக்கையாக அமைவது
1) கனகூளத்தை வாரத்துக்கொரு தடவை கிளறுதல்.
2) மூடிய மனையைப் பயன்படுத்தல்.
3) வளி வெளிச்செலுத்தற் காற்றாடிகளைப் பயன்படுத்தல்
4) பொருத்தமான கனகூளப் பதார்த்தத்தைப் பயன்படுத்தல்.
5) நீர்ப்பாத்திரங்களில் நீர்க்கசிவு ஏற்படல், மேவுபாய்தல் ஆகியவற்றைத் தவிர்த்தல். (17)

## 16. சுற்றுலாக் கைத்தொழில்

463. சுற்றாடல் சார் சுற்றுலாக் கைத்தொழில் தொர்டர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - உள்ளூர் மக்களின் கலாச்சாரம் பற்றி ஏனையோர் அறியக் கூடியதாக இருக்கும்.
B - சமூக ஏற்றத் தாழ்வுகள் குறைவடையும்.
C - அரச நிறுவனங்களிற்கு பொருளாதார அனுகூலம் கிடைத்தல்.
D - வெவ்வேறு நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள துணையாதல்
மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் சமூக, கலாச்சார அனுகூலங்களாக அமைவது,
1) A,B,C மட்டும் 2) B,C,D மட்டும் 3) A,B,D மட்டும்
4) A,C,D மட்டும் 5) A,B,C,D எல்லாம் (1)

464. இலங்கையில் காணப்படும் விவசாயம் சார்ந்த சுற்றாடல் சார் சுற்றுலாக் கைத்தொழில் பிரதேசம்
1) பண்ணைகள் 2) சிகிரியா 3) யாப்பகூவா
4) காடுகள் 5) மலைகள் (3)

465. உள, உடல் சுகத்தை பெறும் நோக்கிலான சுற்றுலாக்களாக அமைவது
1) கலாச்சாரச் சுற்றாடற் சுற்றுலா 2) இயற்கையோடொட்டிய சுற்றுலா
3) வீரதீரச் செயல் சார்ந்த சுற்றுலா 4) ஆன்மீகச் சுற்றாடற் சுற்றுலா
5) விவசாயம் சார்ந்த சுற்றாடற் சுற்றுலா (4)

466. சுற்றாடல் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலில் அதிக உயிர்ப்பல்வகைமையுடன் காணப்படும் கவர்ச்சியான இடம்,
1) கரையோர வலயம் 2) நீர்வீழ்ச்சிகள்
3) காடுகள் 4) கண்டல் நிலங்கள்
5) மலைகள் (5)

467. சுற்றாடல்சார் உல்லாசப் பயணத் தொழிலினது பிரதான நோக்கம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
1) இயற்கைச் சூழல் தொகுதிகளில் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குதல்.
2) பிரதேச ரீதியிலான கலாசார வழக்கங்களுக்கு மதிப்பளித்தல்.
3) சுதேசவாசிகளுடன் நட்புறவை ஏற்படுத்தாதிருத்தல்.
